**06.03.2026**

**CC 46/2020**

**PW.1. Ramesh S/o. Munusami.**

**எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :**

1. நான் இராணுவத்தில் பணிரபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நீதிமன்றத்தில் சாட்சி அளித்துள்ளேன். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். குடியாத்தம் அரசு மருத்துவமனையிலும், எனது வீட்டிலும், காவல் நிலையத்திலும் விசாரணை செய்தார்கள்.

2.சம்பவத்தில் காயம்பட்ட உடன் காவல் நிலையத்திற்கு சென்றபோது போலிசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. அரசு மருத்துவமனையில் சென்று சிகிச்சை பெற சொன்னார்கள். அங்கு வந்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

3. சம்பவம் நடந்த பின்னர் நான் காவல் நிலையத்திற்கு சென்று போலிசாரிடம் எனது அப்பா 2009ல் இறந்துவிட்டதாகவும், அவர் தரவேண்டிய பணத்தை பழனி மற்றும் கோதண்டம் என்பவரிடம் கேட்டுசென்றதாகவும், அவர்கள் பணத்தை திரும்ப தருவதாக சொன்னதாகவும், புகாரில் உள்ள அனைத்து விவரங்களையும் சொன்னேன். போலிசார் என்னை மருத்துவமனையில் சென்று சிகிச்சைபெற சொன்னார்கள்.

4. நான் காவல் நிலையத்தில் சென்று யாரிடம் சொன்னேன் என்றால் பரதாரமி காவல் நிலைய உதவி ஆய்வாளரிடம் நடந்ததை சொன்னேன். நான் சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு ஆட்டோவில் சென்றேன். சம்பவ இடத்திற்கு நானும், எனது தம்பி ராஜேஷ் என்பவரும் இருசக்கர வாகனத்தில் சென்றோம்.

5. சம்பவ இடத்திலேயே இருசக்கர வாகனத்தை விட்டுவிட்டு நாங்கள் ஆட்டோவில் காவல் நிலையத்திற்கு சென்றோம். என்னுடைய சட்டை, பேன்ட் முழுவதும் ரத்ததால் நனைந்துபோய் இருந்தது. போலிசார் என்னுடைய ரத்தகரை படிந்த ஆடைகளை ஆதாரத்திற்காக ஒப்படைத்தேனா என்றால் சரியாக ஞாபகம் இல்லை.

6. மேற்படி சட்டையும், பேன்டும் ரத்ததால் நனைந்திருந்தால் நான் போலிசாரிடம் ஒப்படைத்திருப்பேன் என்றாலும், போலிசாரும் ஆதாரத்திற்காக என்னிடம் பெற்றிருப்பார்கள் என்றாலும் சரியல்ல. என்னை மருத்துவமனையில் சிகிச்சைகாக அனுமதித்தது யார் என்றால் எனது தம்பியின் மாமனார் ஆவார். பெயர் ஞாபகம் இல்லை.

7. எனது தம்பியையும் அவரது மாமனார்தான் மருத்துவமனையில் சேர்த்தார். எனது தம்பியை நான்தான் சிகிச்சைகாக சேர்ததாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடபட்டுள்ளது

என்றால் நான்தான் சேர்த்தேன், உதவிக்காக எனது தம்பியின் மாமனார் வந்தார்.

8. நான் மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் இரவு 10 மணிக்கு மேல் இருக்கும். மருத்துவரிடம் என்னை எத்தனை பேர் தாக்கியதாக சொன்னேன் என்றால் 3 அல்லது 4 பேர் என்று சொன்னேன். நான் முதல் விசாரணையில் என்னை 3 அல்லது 4 நபர்கள் அடித்ததாக சொல்லியிருந்தேனா என்றால் சொல்லவில்லை.

9. எங்களை அடித்த நபர்கள் என்ன உடை அணிந்திருந்தனர் என்றால் வேஸ்டி சட்டை போட்ட நபர் பழனியும், கோதண்டம் என்பவர் லுங்கியும், பனியனும் அணிந்திருந்தனர். என்னை அடித்ததாக சொல்லப்படும் பழனி என்ற நபர் வேஸ்டி சட்டை அணிந்திருந்தார் என்றால் சரிதான்.

10. நான் முதல் விசாரணியல் கோதண்டம் என்பவர் தாக்கியதாக சொல்லவில்லை என்றாலும், தற்போதுதான் கோதண்டம் அடித்ததாக சொல்கிறேன் என்றாலும் சரிதான். சம்பவம் எந்த இடத்தில் நடந்ததாக மருத்துவரிடம் சொன்னேன் என்றால், எதிரிகளின் வீட்டிடம் நடந்ததாக சொன்னேன்.

11. எனது வீட்டின் முகவரி சரஸ்வதி நகர் ஆகும்.

**(சாட்சி கேள்வி கேட்கவிடாமல் எதிரிகள் தரப்பு வழக்கறிஞரிடம் நியாயமாக நடக்கவில்லை என்றும், மாத்தி மாத்தி கேள்விகேட்கிறீர்கள் என்று சொல்லியதால் நீதிமன்றம் மீண்டும் மீண்டும் அறிவுறுத்தியும் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லாமல் வேறு விஷயங்கள் பேசி கொண்டிருந்ததால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகறது.)**

Sd/–R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.